தொழிலகபாதுகாப்புமற்றும்சுகாதார, துணைஇயக்குநர்–II, அலுவலகம்,
திருச்சிராப்பள்ளி.

அனுப்புநர்
திருமதி. ரா.இளவரசி, எம்.இ.,
துணை இயக்குநர்–II,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
2/3, அப்துல் சலாம் தெரு,
காஜா நகர், திருச்சிராப்பள்ளி–20.

பெறுநர்
உரிமையாளர்/மேலாளர்,

எண் : இ/305/2025 நாள் : 03.05.2025

ஐயா,

**பொருள் :** தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச்சட்டம் 1972 மற்றும் விதிகள் 1973– 2024–ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் நல நிதி செலுத்த நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கிடக் கோரப்பட்டது – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** 1.சென்னை–6, தமிழ்நாடு தொழிலாளர் நலவாரிய செயலாளரின் கடித எண்: சி3/14149.2/2025, நாள் : 28.02.2025.
2.சென்னை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் குறிப்பாணை எண்:K1/5264/2025, நாள் : 12.03.2025.

*****************************

மேற்பொருள் தொடர்பாக, தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் பிரிவு 2(d) பிரிவு 15 மற்றும் விதிகள் 11(A) மற்றும் 12– ன் படி தொழிற்சாலைகள் ஒரு ஆண்டில் 30 நாட்களுக்கு மேல் பணிபுரிந்த அனைத்து வகையான தொழிலாளர்களுக்கும் தொழிலாளர் நல நிதியாக அவர்களது டிசம்பர் மாத ஊதியத்திலிருந்து ரூ.20/– பிடித்தம் செய்து அதனுடன் வேலையளிப்பவர் பங்காக ரூ.40/– சேர்த்து ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ.60/– வீதம் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 31–க்குள் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டும். மேலும் தொழிற்சாலைகள் lwmis.lwb.tn.gov.in – என்ற இணையவழி மூலமாக செலுத்தப்பட்டு அதன் நகலினை இவ்வலுகத்தில் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

துணை இயக்குநர்–II,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
திருச்சிராப்பள்ளி.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது
1.கூடுதல் இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருச்சிராப்பள்ளி.
2.இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருச்சிராப்பள்ளி.